பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**10 12 2025 WEDNESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

1. அரசியல் சாசன கடமையை நிறைவேற்றும் வகையில்தான், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. பத்திரிகையாளர்களின் நலன்களை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. ”ஒரே பாரதம் — உன்னத பாரதத்தின்” எடுத்துக்காட்டாக காசி தமிழ் சங்கமம் திகழ்வதாக மத்திய இணையமைச்சர் திரு **B L** வர்மா தெரிவித்துள்ளார்.

4. சட்டீஸ்கரில் **4** நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

5. ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Unnati Hooda** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

அரசியல் சாசன கடமையை நிறைவேற்றும் வகையில்தான், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

மக்களவையில் இதுதொடர்பாக நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான விவாதத்திற்கு மத்திய அரசு தயங்குவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சி செய்ததாக அவர் குறை கூறினார்.

எந்தவொரு பிரச்சினை குறித்து விவாதிக்க மத்திய அரசு தயங்கியதில்லை என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையத்தின் வரம்புக்கு உட்பட்டது இப்பணிகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகள் தெரிவித்த புகார்களின் அடிப்படையிலேயே வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருவதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>

பெண் பயணிகளின் பாதுகாப்பிற்கு ரயில்வே கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், பெண் பயணிகளின் பாதுகாப்பு மேம்பாட்டிற்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டார்.

ரயில் பெட்டிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு இருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

பத்திரிகையாளர்களின் நலன்களை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், பத்திரிகையாளர்கள் நலன்களுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை பட்டியலிட்டார்.

<<<<<<>>>>>

நிர்பயா நிதியத்தின்கீழ் கடந்த ஐந்தாண்டுகளில் 3 ஆயிரத்து 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய மகளிர் மற்றும்

குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி சாவித்ரி தாகூர் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், மகளிர் மற்றும் பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக இந்த தொகை செலவிடப்படுவதாக கூறினார்.

<<<<<<>>>>>

ஒரு மாவட்டம் — ஒரு பொருள் திட்டத்தின்கீழ், ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜூம்தார் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 775 மாவட்டங்களை சேர்ந்த இந்த பொருட்களுக்கு ஏற்றுமதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>>

சரக்கு போக்குவரத்து கட்டணங்களை குறைப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தில்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளின் சாலை கட்டமைப்பு

வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒரு லட்சத்து **50** ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளதாக கூறினார்.

<<<<<<>>>>>

ஊரகப்பகுதிகளில் தொழில்நுட்ப சேவைகளை கொண்டு செல்வதில் செயற்கைக்கோள் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தொழில் அதிபர் திருமதி **Lauren Dreyer-**வுடன் நடத்திய ஆலோசனைக்கு பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் இணையதள சேவை வழங்குவதற்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் இந்த தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

இண்டிகோ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு **Pieter Elbers,** விமான சேவை ரத்து தொடர்பான அனைத்து ஆவணங்களையும் நாளை நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும் என்று சிவில் விமான போக்குவரத்துத்துறையின் தலைமை இயக்குநரகம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

புதுதில்லியில் நாளை பிற்பகல் 3 மணியளவில் இதற்கான கூட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட துறைகளின் உயரதிகாரிகளும் இதில் பங்கேற்பார்கள் என்று சிவில் விமான போக்குவரத்துத்துறை கூறியுள்ளது.

<<<<<>>>>>

நாடு முழுவதும் 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின்கீழ், இதுவரை 99 புள்ளி ஒன்பது எட்டு சதவீத கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, 50 கோடியே 96 லட்சத்து 46 ஆயிரத்து 143 கணக்கீட்டு படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இவற்றில், 99 புள்ளி ஐந்து ஒன்பது சதவீத கணக்கீட்டு படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

’’ஒரே பாரதம் — உன்னத பாரதத்தின்’’ எடுத்துக்காட்டாக காசி தமிழ் சங்கமம் திகழ்வதாக மத்திய இணையமைச்சர் திரு பி எல் வர்மா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது கலாச்சார திருவிழா என்றும் குறிப்பிட்டார்.

மாநில மொழிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுவதாகவும் திரு பி எல் வர்மா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நிதி மோசடி வழக்கு ஒன்றில் சீனாவை சேர்ந்த இரண்டு பேருக்கு எதிராக சிபிஐ குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது.

ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு தொடர்பான வழக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சிபிஐ கூறியுள்ளது.

<<<<<<>>>>>

இந்தியா — அமெரிக்கா இடையே வர்த்தக ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான பேச்சுக்கள் இன்று புதுதில்லியில் தொடங்கின.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்த பேச்சுக்களில், வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

<<<<<<>>>>>

சட்டீஸ்கரில் 4 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

**Kanker** மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் காவல்துறையின்முன் அவர்கள் சரணடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த நக்சலைட்டுகளுக்கு **23** லட்சம் ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டிருந்ததாக அவர் மேலும் கூறுகிறார்.

**2009-**ஆம் ஆண்டு **29** பாதுகாப்புப்படையினர் உயிரிழந்த சம்பவத்தில் தொடர்புடையவர்கள் இந்த நக்சலைட்டுகள் என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>

பங்களாதேஷ் அதிபர் திரு முகமது ஷஹாபுதினை, அந்நாட்டு தலைமை தேர்தல் ஆணையர் திரு **Nasir Uddin** இன்று சந்தித்து பேசினார்.

டாக்காவில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, நாடாளுமன்ற தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தல் நேர்மையாகவும், சுமூகமாகவும் நடைபெற தேவையான அனைத்து ஒத்துழைப்பும் அளிக்கப்படும் என்று திரு முகமது ஷஹாபுதின் உறுதி அளித்ததாக அந்த செய்திகள் கூறுகின்றன.

<<<<<<>>>>>

அபுதாபியில் நடைபெற்ற மூன்று நாள் ஊடக உச்சிமாநாடு இன்று நிறைவடைந்தது.

132 நாடுகளை சேர்ந்த 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர்.

300-க்கும் மேற்பட்ட அமர்வுகளில் 400 சர்வதேச பேச்சாளர்கள் பங்கேற்றனர்.

இதனையொட்டி நடைபெற்ற கண்காட்சியில் 300-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்துகொண்டன.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

சென்னையில் சற்றுமுன் முடிவடைந்த ஆடவர் பிரிவு வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா 4-2 என்ற கோல் கணக்கில் அர்ஜென்டினாவை வென்றது.

---------------

ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Unnati Hooda காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-12, 21-18,** என்ற செட் கணக்கில் ஐக்கிய அரபு எமிரேட்டின் **Prakriti**-ஐ வென்றார்.

**Anupama Upathyaya, Isharani Baruva, Aditi Bhat, Tanya Hemant, Shriyanshi** ஆகியோர் மகளிர் ஒற்றையர் பிரிவிலும், **Arya Bhivpathaki, Priyanshu Rajavat, Shankar Muthusamy Subramaniyan** ஆகியோர் ஆடவர் ஒற்றையர் பிரிவிலும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

-------------------

காமன்வெல்த் கோ-கோ விளையாட்டுப் போட்டி அடுத்த ஆண்டு மார்ச் மாதம் **9**-ஆம் தேதி தொடங்கி, **14**-ஆம் தேதிவரை இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**24** நாடுகள் இதில் பங்கேற்கின்றன.

-------------------

சர்வதேச டென்னிஸ் போட்டிகளுக்கான ஜூனியர் தரவரிசைப் பட்டியலின் மகளிர் பிரிவில் இந்தியாவின் மாயாராஜேஷ்வரன் ரேவதி **50**-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<>>>>>>

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

1. அரசியல் சாசன கடமையை நிறைவேற்றும் வகையில்தான், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. பத்திரிகையாளர்களின் நலன்களை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. ”ஒரே பாரதம் — உன்னத பாரதத்தின்” எடுத்துக்காட்டாக காசி தமிழ் சங்கமம் திகழ்வதாக மத்திய இணையமைச்சர் திரு B L வர்மா தெரிவித்துள்ளார்.

4. சட்டீஸ்கரில் 4 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

5. உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

<<<<<<<<**END**>>>>>>>>